**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 660/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : | நல்லுச்சாமி | **Calling** | : | **தோல் ஷாப்** |
| **Village** | : | **நல்லேந்திரபுரம்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | **10.03.2026.** |

**10.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திரு. குமார் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் நல்லேந்திரபுரத்தில் குடியிருந்து தோல்ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த ரஞ்சித் குமார் எனது தம்பி. சுமார் 8 மாதத்திற்கு முன்பு இறந்து போன இரஞ்சித் குமாரின் போனிலிருந்துஎனக்கு போன் வந்தது. நான் இரண்டு முறை

போனை எடுக்கவில்லை. மூன்றாவது முறை போன் வந்த போது நான் போனை எடுத்தேன். அதில் பேசிய நபர் ரஞ்சித் குமாருக்கு முத்தழகு பட்டி பிரிவில் ரஞ்சித் குமார் இருசக்கரவாகனத்தில் வந்த போது ஈச்சர் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டு செல்வதாக சொன்னார். இந்த சம்பவத்தில் ரஞ்சித் குமார் இறந்து விட்டார். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் போலிசார் விசாரணையில் கடந்த 14.02.2025 ம் தேதி சொந்த வேலையாக மாலை 5 மணிக்கு முத்தழகு பட்டி பிரிவு அருகே இருந்த போது ரஞ்சித் குமார் TN 63 AM 8922 என்ற ஸ்பிலன்டர் இருசக்கர வாகனத்தில் தெற்கிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் வடக்கிருந்து தெற்கு நோக்கி வந்த TN 57 BM 2301 என்ற லாரியை ஓட்டி வந்த ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ரஞ்சித் குமார் வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதினார் என்றும், கீழே விழுந்த ரஞ்சித் குமாருக்கு தலை, கழுத்து, தாடை, இடது கால் ஆகிய இடங்களில் காயம் பட்டது என்றும் நானும் அக்கம்பக்கத்தினரும் அவரை ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும் இந்த சம்பவத்தில் ரஞ்சித் குமார் இறந்து விட்டார் என்றும் இந்த சம்வத்தை நான் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது வழக்கு சம்பவத்தை கேள்வி பட்டு தெரிந்து கொண்டதாகவும் எதிரியை தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.10 16:45:30 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 660/2025**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பெரியசாமி | **Caste** | : | |
| **Father's Name** | : | பழனிசாமி | **Calling** | : | **மரக்கடை வேலை** |
| **Village** | : | **நல்லேந்திரபுரம்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **39** |
| | | | **Dated** | : | **10.03.2026.** |

**10.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திரு. பெரியசாமி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் நல்லேந்திரபுரத்தில் குடியிருந்து மரக்கடையில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த ரஞ்சித் குமார் எனது அக்கா மகன். சுமார்7, 8 மாதத்திற்கு முன்பு அ.சா.4 குமார் எனக்கு போன் செய்து ரஞ்சித் குமாருக்கு முத்தழகு பட்டி பிரிவில் ரஞ்சித் குமார் இருசக்கரவாகனத்தில் வந்த போது ஈச்சர் மோதி விபத்து

ஏற்பட்டதாகவும் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டு செல்வதாக சொன்னார். இந்த சம்பவத்தில் ரஞ்சித் குமார் இறந்து விட்டார். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலிசார் விசாரணையில் கடந்த 14.02.2025 ம் தேதி சொந்த வேலையாக மாலை 5 மணிக்கு முத்தழகு பட்டி பிரிவு அருகே இருந்த போது ரஞ்சித் குமார் TN 63 AM 8922 என்ற ஸ்பிலன்டர் இருசக்கர வாகனத்தில் தெற்கிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் வடக்கிருந்து தெற்கு நோக்கி வந்த TN 57 BM 2301 என்ற லாரியை ஓட்டி வந்த ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ரஞ்சித் குமார் வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதினார் என்றும், கீழே விழுந்த ரஞ்சித் குமாருக்கு தலை, கழுத்து, தாடை, இடது கால் ஆகிய இடங்களில் காயம் பட்டது என்றும் நானும் அக்கம்பக்கத்தினரும் அவரை ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும் இந்த சம்பவத்தில் ரஞ்சித் குமார் இறந்து விட்டார் என்றும் இந்த சம்வத்தை நான் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது வழக்கு சம்பவத்தை கேள்வி பட்டு தெரிந்து கொண்டதாகவும் எதிரியை தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.10 16:45:38 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 660/2025.**

**Prosecution Witness : 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மாரிமுத்து | **Caste** | : |
| **Father's Name** | : முருகன் | **Calling** | : **தோட்டத்து வேலை** |
| **Village** | : **செட்டிநாயக்கன் பட்டி** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **36** |
| | | **Dated** | : **10.03.2026.** |

**10.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 5 திரு. மாரிமுத்து ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் செட்டிநாயக்கன்பட்டியில் குடியிருந்து தோட்ட வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். கடந்த 14.02.2025 தேதி நானும் குமரவேல் என்பரும் ரஞ்சித் குமாருக்கு விபத்து ஏற்பட்ட தகவல் கேள்விபட்டு சம்பவ இடம் சென்று பார்த்தோம் அங்கு போலிசார்

விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடமும் குமரவேல் என்பவரிடமும் கையெழுத்து கேட்டார்கள் போட்டு கொடுத்தோம். பார்வை மகஜர் அ.த.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 14.02.2025 மாலை 5 மணிக்கு கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். பள்ளபட்டி பைபாஸ் பிரிவில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் மேற்படி தேதியில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் இறந்தவர் எனது உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றாலும் அதை மறைத்து பொய்சாட்சியம் செய்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.10 16:45:43 +0530

Judicial Magistrate No.I

Dindigul.